## பிப்ரவரி - 9

**"என் ஆத்துமாவே கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால் நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு." - சங் 116 : 7.**

கிறிஸ்தவனுடைய எண்ணத்தின் பழக்கம், அவனுடைய ஆவிக்குரிய நிலையைக் காண்பிக்கும் சாதாரணமாக (சுட்டுக் கோலாக) இருக்கிறது போல், அவனுடைய முன்னேற்றத்திலோ அல்லது பின்போக்கிலோ தலையிடுவதற்கு உண்மையாகவே அதிலே எண்ணத்தின் பழக்கம் அதிகம் இருக்கிறது. எண்ணத்தின் நல்ல பழக்கங்கள் கவனமாக விருத்தி செய்யப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. மனதின் ஓய்வு நேரங்களில் மனது வழக்கமாகத் திரும்புகிற சகஜ நிலையே "எண்ணத்தின் பழக்கம்" என்பது எங்கள் கருத்து. ஜீவியத்தின் வேலையில் நமது மனதின் சக்திகளை அவசியம் ஈடுபடுத்த வேண்டும். ஏனென்றால், நாம் எதையும் வெறும் இயந்திரமாக மாத்திரம், அதில் நமது எண்ணத்தை ஒருமுகப்படுத்தாமலும் செய்தால், அதை நன்றாகச் செய்ய முடியாது என்றாலும், இங்கேயும், குணத்தில் நன்றாக நிலைநாட்டப்பட்டிருக்கும் கிறிஸ்தவ மூலத்துவம், நம்மை அறியாமலே வழி நடத்தும். உழைப்பின் வருத்தமும் கவலையும் கொஞ்ச நேரம் எடுபட்டால் நிலை நாட்டப்பட்ட எண்ணத்தின் பழக்கம், துருவத்தைக் காட்டும் காந்த ஊசிபோல் விரைவாக தேவனில் இளைப்பாறுதலுக்குத் திரும்ப வேண்டும். **– Z ’95, 250 (R 1884).**

மாம்சத்தின் நோக்காகப் பார்க்கும்பொழுது, கிறிஸ்தவ ஜீவியம் மிகவும் அதிக மனக்கலக்கமும், அமைதியின்மையும் உள்ளதொன்றாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்ப நிலைகளில் இந்த மனக்கலகமும், அமைதியின்மையும் தன்னுடைய குணத்தின் ஒரு பாகமாக அமைவதை அனுமதிப்பதே கிறிஸ்தவனுக்கு ஆபத்தாகும். ஈந்தப் போக்கை நிர்மூலமாக்க அவனுடைய சார்பாகத் தேவனுடைய வார்த்தையில் தெரியப்படுத்தியிருக்கும் கர்த்தருடைய நல்லெண்ணத்திற்கும், நோக்கத்திற்கும் நம்பிக்கையோடு இடைவிடாமல் திரும்புவது அவசியமாகும். ஏனென்றால், தேவனுடைய வார்த்தையின் மூலமாகக் கர்த்தரின் மேல் இந்த விதமாக சார்ந்திருப்பதினால், அவன் உபத்திரவத்திலும், இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் பெறுகிறான். **– P ’33, 16.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோபு 34:29; சங் 1:1,2; 4:8; 25:12; 29:11; 85:8; 119:169; 125:1,5; நீதி 3:13-26; ஏசா 26:3,12; 28:12; 32:2,17,18; 53:5; லூக் 1:79; யோவா 14:27; 16:33; அப் 10:36; ரோம 10:15; பிலி 4:7,9;

**கோபுர வாசிப்பு : Z ’14, 25, 204 (R 5387, 5492 page 202).**

**வினாக்கள்** : நமக்கு இளைப்பாறுதலளிக்கும் இடமான வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தில் நமது அனுபவங்கள் என்ன? அதில் உதவியாயிருந்ததும் இடையூறாயிருந்ததும் எவை? பலன் என்ன?